# இயல் 1

# முன்னுரை



# இயல் 1
# முன்னுரை

1.0 ஆய்வு அறிமுகம்

1.1 ஆய்வு நோக்கம்

1.2 ஆய்வு முன்னோடிகள்

1.3 முதன்மைச் சான்றாதாரங்கள்

1.4 துணைமைச் சான்றாதாரங்கள்

1.5 ஆய்வு எல்லை

1.6 ஆய்வு கருதுகோள்

1.7 ஆய்வு அணுகுமுறை

1.8 ஆய்வுப் பகுப்பு

# இயல் 1
# முன்னுரை

## 1.0 ஆய்வு அறிமுகம்

உலகின் ஒவ்வொரு பொருள்களின் (Things) இயக்கத்திற்கும், உருவாக்கத்திற்கும் இயற்கையே முழுமுதல் காரணமாகிறது. இயற்கையைச் செயிக்கின்ற போராட்டமே மனிதனின் இயல்பான வாழ்க்கை முறையாகத் தொடர்ந்து நடந்து வருகிறது. இயற்கையின் மாறுபட்ட அமைப்புகளுக்கேற்ப மக்களின் வாழ்க்கைச் சூழல், மொழி, பண்பாடு மற்றும் கலை, இலக்கியங்கள் அதன் வெளிப்பாடுகளுடன் அமைகின்றன. பொருளாதாரம், அரசியல், பண்பாடு எனப்பல்றேு காரணிகளால் வெவ்வேறு வாழ்க்கை முறையை மேற்கொண்டுள்ள மக்களின் வாழ்க்கைத்தரங்களும் மாறுபடு-கின்றன. இச்சமூக அமைப்பில் பெண்கள், ஆண்கள், குழந்தைகள், பெரியவர்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றனர். இயற்கையின் படிநிலை வளர்ச்சி, சமூக வளர்ச்சியை வேகமாக நடத்தியும் மாற்றியும் வருவதற்கேற்ப, மனித சமூகத்தின் நாகரிக வளர்ச்சியும் அமைகிறது.

வரலாற்றின் வழி பல்வேறு சமூக அமைப்புகள் இருந்ததையும் ஒவ்வொரு சமூக அமைப்பிலும் பெண்களுக்கான இடம் குறித்தும் ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர். ஒவ்வொரு வகைச் சமூக அமைப்பிலும் பெண்களின் பங்கும் அவர்களின் நிலையும் சிற்சில வேறுபாடுடன் தொழிற்பட்டே வந்திருக்கிறது. காலஇடவேறுபாடுகளால் மாறுதலுக்குள்ளான சமூக அமைப்பில் பெண்களுக்கான இடம் மாறியும்-மாற்றப்பட்டும் வந்துள்ளன. அதாவது "முதலாளியத்தின் வளர்ச்சியுடன் ஐரோப்பாவிலும், காலனித்துவ நாடுகளிலும் தந்தைவழிச் சமூக அமைப்புகள் வலுவாக்கப்-பட்டன. வீட்டிற்குரிய உற்பத்தியில் முன்பு தமக்கிருந்த உரிமைகளைப் பெண்கள் இழந்ததுடன் வீடுகளிலும் இவர்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். விளைநிலங்களிலும் தொழிற்சாலைகளிலும் சுரண்டப்பட்டனர். தாய்வழிச்

சமூக அமைப்பின் மிச்சசொச்சங்கள் முற்றாக நீக்கப்பட்டன. இப்படியாகச் சமூகத்தில் நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்புகளில் பெண்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டே வந்தனர். சமூகத்தின் உற்பத்தி மற்றும் உற்பத்தி உறவுகளுடன் தொடர்புகொண்ட பெண்களுக்கு, வரலாறு நெடுகிலும் சிக்கல்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தன. இன மறுஉற்பத்தி (Reproduction) செய்யும் திறன் பெண்களுக்கு இருந்தும், உற்பத்தித் தொழிற்கருவிகளின் மிகப்பெரும் வளர்ச்சியினால், பெண் இன மறுஉற்பத்திக்கானவள் என மட்டுமே இருத்தி வைக்கப்பட்டுவிட்டாள். சமூகம், அரசியல், கல்வி, கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு முதலிய அனைத்துவகை நடவடிக்கைகளிலும் 'ஒழுக்கக்கோட்பாடு' அடிப்படையில் பெண் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டேயிருக்கிறாள். இதை மாற்றுவதை பெண்கள் இயக்கங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன.

நீண்ட வரலாறு கொண்ட தமிழ் இலக்கியப் பரப்பில் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் மிகக்கடுமையானவையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. கற்பு, ஒழுக்கம் சார்ந்த நடவடிக்கைகள் குணங்கள் பெண்களுக்கென்றே கட்டமைக்கப்படுகின்றன. ஆனால் தனித்தன்மைகளோடு அரசியல் சார்ந்து இயங்குகின்ற பெண்கள் அமைப்புகளின் செயல்பாடுகளால் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் வெளிப்படையாக நடப்பதில்லை. ஆனாலும் "பெண்களுக்கெதிரான வலுவுள்ள ஆயுதமாகப் பலாத்காரம் செய்வதை அதிகாரத்திலுள்ளோர் பயன்படுத்தத் தொடங்கினர்.

சமூக வரலாற்றிலும் வரலாறுகளிலும் சிறந்த பெண்களாகத் திகழ்ந்தவர்களைப்பற்றிய செய்திகள் - கருத்துகள் பெண்களின் மனநிலையில் பெரும்பதிவுகளை - பாதிப்புகளை உண்டாக்கியிருக்கிறது. புராணக்கதைகள், நாட்டுப்புறக் கதைகள் எனப்பலவற்றிலும் வரும், பெண்கதாபாத்திரங்கள், பெண்களின் ஒழுக்கங்களுக்கான 'முன்மாதிரிகளாகக்' கற்பிதம் செய்யப்பட்டிருக்கிறார்கள். கற்புக்கென்று கண்ணகி, சீதை, கஷ்டத்துக்கென்று நல்லதங்கள், பத்தினித் தன்மைக்கென்று சாவித்திரி, கணவனுக்குத் தொண்டு செய்வதற்கென்று நளாயினி என அடுக்கிக் கொண்டே போகலாம். கதை மாந்தர்களாகிய இவர்களின் புனைவுகள் - குணங்கள், பெண்கள் தங்கள்

வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகளாக எப்படி மாற்றம்பெற்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பெண்கள் தங்களது வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தலைவிதி எனக்காரணம் சொல்வதையும் வரலாற்றுப் பெண்பாத்திரங்களையும் ஒப்பிட்டுக் கொள்வார்கள்.

பெண்களின் வாழ்க்கையில் புராண-சமூகப் பெண்பாத்திரங்களின் புனைவுகள், தாக்கங்கள் ஆழமாகப் பரவியுள்ளன. வரலாற்றுவழி பெண்பாத்திரங்கள் புராணக்கருத்துகள் பெண்கள் வாழ்வில் பண்பாட்டில் பெரும்புரட்டுதலைச் செய்துள்ளதையும் இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேணடும். மேலும் தமிழ்ச்சமூகம் சார்ந்த சடங்குகளும் நம்பிக்கைகளும் கலை, நிகழ்த்து கலைப்பண்பாடும், ஊடகங்களும் பெண்களின் வாழ்வியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

ஒரு நூற்றாண்டிற்கும் மேலான வரலாற்றினைக் கொண்ட தமிழ்நாவல் உலகம் பிரதாபமுதலியார் சரித்திரம் தொடங்கிப் பெண்களின் பிரச்சினைகளைப் பேசிக் கொண்டே இருக்கிறது. புனைவும் அதீதப்புனைவும் கொண்ட கற்பனைப் பாத்திரங்களாகப் படைக்கப்பட்ட, மரபுகள் மாறிவிட்ட இன்றையச் சூழலில் பெண்களின் உடல் மற்றும் உள்ளம் சார்ந்த சிக்கல்களைப் பல்வேறு படைப்புகளில் முன்வைக்கின்றனர்.

பெண்கள், கல்வியறிவு பெற்று வேலை வாய்ப்புகளால் பொருளாதார நிலையில் உயர்ந்தவர்களாகி வருகின்றனர். சமூகம் மற்றும் குடும்ப அமைப்பிற்குள் இருந்து உடைத்துக் கொண்டு வெளியேறும் தன்னம்பிக்கை நிறைந்த பெண்களாக உருவாகிவருகின்றனர். மண்ணை நேசிக்கிற மண்ணோடு இரண்டறக்கலந்து கிடக்கிற வாழ்க்கையை நேசிக்கிற பெண்களே, இன்றைய பின் நவீனத்துச் சூழலில் புதுமைப் பெண்களாக நமக்குத் தேவைப்படுகின்றனர். மேலும் ஆண்களோடு இணைந்து இந்த மண்ணைக் காக்கின்ற பொறுப்பு பெண்ணுக்கும் இருக்கிறது என்றும் வலியுறுத்தப்படுகிறது. இன்றும் கூட விவசாயத்தையே அடிப்படைத் தொழிலாகக் கொண்ட நம்நாட்டில் மக்களின் வாழ்க்கை, சிக்கல்களை

உடையதாக இருப்பது என்பதும் படைப்பது என்பதும் எதார்த்தப் புனைவுகளாகவே அமைகின்றன எனலாம்.

நிலத்தின் மீதான மதிப்பு பணமாக மாற்றப்படுவதுபோல, நிலம் போல மறுஉற்பத்தி தரும் பெண்ணுடல் பணமாகப் பார்க்கப்படுகிறது. காலங்காலமாய் விவசாயத் தொழில் செய்த பெண்களும் அவர்தம் உடல் உழைப்பும் மனித சமூக வளர்ச்சிக்கு உதவின. அதேபொழுது பெண்களின் வாழ்க்கை என்பது, நிலத்தை வீட்டடி மனைகளாக மாற்றத் தொடங்கிய பண்புக்கு மனிதன் மாறத் தொடங்கிய பிறகு தொடங்கிவிட்டது எனலாம். இன்று வரை பெண்ணையும், நிலத்தையும் பொருளாகவும் தொழிலுக்கான மூலப் பொருளாகவும் பார்க்கும் மரபு தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற சூழலில் பெண் விடுதலையை முன்வைக்கும் பெண்ணியம் குறித்த ஆய்வுகள் அவசியமாகின்றன.

## 1.1 ஆய்வு நோக்கம்

**“இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம்”** என்பது இவ்வாய்வுக்குரிய பொருளாகும். இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், பெண்ணியம் (Feminism) என்னும் சொல்லாடல் இலக்கியம் மற்றும் சமூகவியல் ஆய்வு முறைகளில் வலிமை பெற்று வருகின்றது. பெண்களின் உரிமைகளை மீட்டெடுப்பதில் பெண்ணியம் சார்ந்த இயக்கங்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. பெண்ணிய இயக்கங்களின் செயல்-பாடுகள் திட்டங்கள், கொள்கைகள் யாவையும் உலகம் முழுமைக்கும் ஒரே மாதிரியானதாக இருப்பதில்லை. ஒவ்வொரு நாட்டின் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்றாற்போல் வெவ்வேறு தன்மைகள் கொண்டு விளங்குகின்றன. ஆனால் இந்த இயக்கங்கள் யாவும் பெண்களை, ஆணாதிக்கச் சமுகத்திலிருந்து இருந்து விடுதலை பெறச்செய்வதை பொதுநோக்கமாகவும் அடிப்படைக் கருத்தாகவும் கொண்டுள்ளன.

பெண் விடுதலை குறித்துப் பெண்ணிய இயக்கங்கள் கொண்டுள்ள அடிப்படைக் கருத்துகளைத் தமிழ்க் கவிதைகளின் வழி விளக்குவது இந்த ஆய்வின் நோக்கமாகும். சமுதாயத்தின் விடுதலை, முன்னேற்றம், அமைதி முதலியனவற்றை பெண் விடுதலையின் மூலமே பெற முடியும் என்பதை வலியுறுத்துவதையும் இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. பெண் விடுதலைக்காகப் பாடுபடும் பெண்கள் உணர்ச்சி மேலீட்டால் கட்டுப்பாடுகளை மீறும் ஆபத்து உள்ளது என்பதும், அது பெண்களின் சமுதாய மதிப்பீட்டைப் பாதிப்படையச் செய்யும் என்பதையும் இதனால் பெண்களின் தனிப்பட்ட வாழ்வு பாதிப்படையும் என்பதை விளக்குவதும் இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. மேலும் பெண், விடுதலைபெறுவதும், உரிமைகளைப் பெறுவதும் அவசியம் என்பதையும் அதைப் பெறுவதற்கான போராட்டத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் பயணப் படவேண்டும்; இல்லையெனில் பெண்ணியத்திற்கு எதிராகப் பெண்களே திருப்பிவிடப்படுவார்கள் என்பதையும் விளக்குவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

## 1.2 ஆய்வு முன்னோடிகள்

இவ்வாய்விற்குரிய முன்னோடிகளாக பெண்ணியம் குறித்து எத்திராஜ் மகளிர் கல்லூரி நடத்திய ‘நவீன இலக்கியத்தில் பெண்ணியம்’ என்ற தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளும் அதன் வெளியீடாக வந்துள்ள ‘தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம்’ என்ற நூலும் இந்த ஆய்வின் முன்னோடி ஆய்வுகளாகும். மேலும் ‘பெண் கவிஞர்களின் புதுக்கவிதைப் போக்கு’ என்னும் தலைப்பில் அய்ய நாடார் ஜானகியம்மாள் கல்லூரியில் மா. தனலட்சுமி செய்துள்ள முனைவர் பட்ட ஆய்வும், ‘இக்காலத் தமிழ்ப் படைப்புகளில் பெண்மொழி’ என்னும் தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நா. மகாராசன், மேற்கொண்ட முனைவர் பட்ட ஆய்வும், ‘தற்காலப் பெண் கவிஞர்களின் படைப்புகள் — ஓர் ஆய்வு’ என்னும் தலைப்பில் மதுரைக் கல்லூரியில் ஜெ.சா.ஜிஜி கிறிஸ்டோபெல் செய்துள்ள முனைவர் பட்ட ஆய்வும் ஆய்வுமுன்னோடிகளாகும்.

## 1.3 முதன்மைச் சான்றாதாரங்கள்

'இருபத்தோரம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம்' என்னும் இவ்வாய்விற்கு தமிழச்சி தங்கப்பாண்டியனின் 'வனப்பேச்சி', திலகபாமாவின் 'எட்டாவது பிறவி', சல்மாவின் 'பச்சைத் தேவதை', கனிமொழியின் 'அகத்திணை', சுகிர்தராணியின் 'இரவு மிருகம்' ஆகிய நூற்கள் முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

## 1.4 துணைமைச் சான்றாதரங்கள்

பெண்ணியம் குறித்த பிற படைப்பாளிகளின் ஆய்வு நூற்களும், கட்டுரைகளும், கவிதைகளும் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

## 1.5 ஆய்வு எல்லை

பெண்ணியக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட படைப்புகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்ற சூழலில், இவ்வாய்விற்காக தமிழச்சி தங்கப்பாண்டியனின் 'வனப்பேச்சி', திலகபாமாவின் 'எட்டாவது பிறவி', சல்மாவின் 'பச்சைத் தேவதை', கனிமொழியின் 'அகத்திணை', சுகிர்தராணியின் 'இரவு மிருகம்' ஆகிய நூற்கள் ஆய்வு எல்லையாக வரையறுத்துக் கொள்ளப் பெற்றுள்ளது.

## 1.6 ஆய்வு கருதுகோள்

இன்றைய சூழலில் தமிழ்ப் பெண் கவிஞர்கள் பெண்ணியக் கோட்பாட்டுப் புரிதலோடு கவிதைகள் படைக்கின்றனர். பெண் படைப்பாளிகள் தங்களுக்கென்ற தனித்த படைப்புமொழியைப் பெண்மொழி என முன்வைக்கின்றனர். சமூக, பொருளாதார, பண்பாட்டு, வாழ்வியல் சூழல்களின் அடிப்படையில் தங்கள் படைப்புமுறையில் வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றனர் என்பன ஆய்வின் கருதுகோளாக அமைகின்றன.

## 1.7 ஆய்வு அணுகுமுறை

சமுதாயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான உரிமைகள் சுதந்திரம் முதலிய கருத்துகள் ஒப்பிட்டு விளக்கப்படுவதால் ஒப்பீட்டு அணுகுமுறையும், இரு பாலருக்குமான உரிமைகள் விளக்கப்படுவதால் விளக்க முறை ஆய்வும், கவிதைகளைத் தொகுக்கும் நிலையில் தொகுப்புமுறை ஆய்வும் பகுத்துக் காணும் நிலையில் பகுப்புமுறை ஆய்வும், மேலும் பெண்ணியம் குறித்த தத்துவ விளக்க அணுகுமுறையும் இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.8 ஆய்வுப் பகுப்பு

“இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம்” என்னும் இந்த ஆய்வு, முன்னுரை, முடிவுரை சேர்த்து பின்வரும் ஏழு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. முன்னுரை
2. பெண்ணியம் - ஓர் அறிமுகம்
3. கோட்பாட்டுவழிப் பெண்ணியம்
4. பெண்மொழி
5. பெண்கவிஞர்களுள் பெண்ணிய நோக்குநிலை வேறுபாடு
6. சமூகவியல் நோக்கில் பெண்கவிஞர்களின் பங்கு
7. முடிவுரை

ஆகியனவாகும்.

முன்னுரையில் ஆய்வு அறிமுகம், ஆய்வு நோக்கம், ஆய்வு முன்னோடிகள், முதன்மைச் சான்றாதாரங்கள், துணைமைச் சான்றாதாரங்கள், ஆய்வு எல்லை, ஆய்வின் கருதுகோள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுப் பகுப்பு முதலிய கருத்துகள் விளக்கப் பெற்றுள்ளன.

‘பெண்ணியம் ஓர் அறிமுகம்’ என்ற முதலாவது இயல் உலகம் தோன்றியது முதல் சமுதாயம் கொண்டுள்ள மாற்றங்களையும் வளர்ச்சியையும் எடுத்துரைக்கின்றது. தொடக்க காலச் சமுதாயத்தில் பெண்கள் முழுமையான உரிமைபெற்றவர்களாக இருந்து வந்துள்ளனர். சமுதாயம் தாய்வழிச் சமுதாயமாகவே விளங்கி வந்துள்ளது. பெண்கள் ஆண்களின் பாதுகாப்பில் வாழத் தொடங்கியது முதலே அடிமைப் படத் தொடங்கினாள். புகழ்ச்சியாலும் சமுதாயக் கட்டுப்பாடுகளாலும் அவள் மேலும் அடிமைப்படுத்தப்பட்டு வந்தாள்,

சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயமாக மாறத் தொடங்கியது முதல் பெண் விடுதலைக்கான குரலும் ஒலிக்கத் தொடங்கியது ஆனால் அவை இயக்கமாக மாற்றம் பெறவில்லை பிற்காலப் பெண்ணியம் 17ம் நூற்றாண்டு முதல் வளர்ச்சி பெற்றது. அறக்கோட்பாட்டில் இருந்து விலகாமல் அவர்களுக்கான உரிமைகளைப் பெறுவதே பெண்ணியம் என்று பெண்ணியம் குறித்த விளக்கமளிக்கும் கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

‘கோட்பாட்டுவழிப் பெண்ணியம்’ என்ற இரண்டாவது இயல் சமுதாயம் முழுவதும் உள்ள ஒவ்வொரு பெண்ணின் உணர்வுகளும் மதிக்கப்பட வேண்டும் என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது. பெண்ணியம் தனக்கென தனியான நிலையான பொதுவான கோட்பாடு-களைக் கொண்டிருக்கவில்லை. அவை செயல்படுகின்ற நாட்டிற்கு ஏற்றார்-போல் போராட்டக் கொள்கைகளையும் போராட்ட அணுகுமுறைகளையும் கொண்டிருக்கவில்லை.

பெண்கள், பண்பாட்டுச் சூழலை எதிர்த்தே போராட வேண்டிய நிலை இருந்து வந்துள்ளது. இதனால் பெண்கள் தங்களுக்கான தகுதியைப் பெறுவதையே முதன்மையாகக் கொண்டிருந்தனர். அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் சுயாட்சியைப் பெறுவதும் பெண்ணியக் கோட்பாடுகளாகக் கொண்டுள்ளன. பெண்ணிய இயக்கங்கள் கொண்டுள்ள கொள்கைகளும் அதன் போராட்டத் தளங்களும் விடுதலை குறித்த உணர்வுகளின்

வெளிப்பாடுகளுமே பெண்ணியக் கோட்பாடுகளாக விளக்கப்படுகின்றன. பெண்களுக்கு எதிராகச் சமுதாயம் கொண்டுள்ள கட்டுப்பாடுகளையும், பெண்மைப் பண்புகளையும் மாற்றி அமைப்பதே பெண்ணியக் கோட்-பாடாகும் என்பதை விளக்குகின்றது.

'பெண்மொழி' என்னும் மூன்றாவது இயல் பெண்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் சக்தியாக பெண் மொழி அமைந்துள்ளது என்பதை விளக்குகின்றது. மனிதன் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்ளை வெளிப்-படுத்த வேண்டும் அதன் மூலம் அவன் மனச்சுமையில் இருந்து விடுபடுகின்றான். உளவியல் சார்ந்த விடுதலையைக் கொடுப்பதில் மொழிகள் ஊடகமாகத் திகழ்கின்றன. அனைத்து மொழிகளும் மனிதனுக்கான உளவியல் மகிழ்ச்சியைத் தருவதில் வேறுபாடு இருப்பதில்லை.

மொழி, தாய்மொழி என்று பெண்ணோடு இணைத்துப் போற்றப்படுகின்றது. ஆனால் பெண்களுக்கு என்று தனியான மொழி இல்லாமல் இருந்ததை உணர்ந்தது. பெண்ணியம், நீண்ட காலமாக ஆண்மொழியையே பயன்படுத்தும் நிலை இருந்து வந்தது. இதனால் பெண்கள் அவர்களின் உடல்ரீதியான, உள்ள ரீதியான உணர்வுகளை அவர்களுக்குள்ளாகக் கூட பகிர்ந்து கொள்ள முடியாத நிலையே இருந்து வந்துள்ளது. இதை மாற்றியமைத்துள்ளது பெண் மொழி. இதனால் பெண்கள் கருத்தியல் சுதந்திரம் பெற்றுள்ளார்கள். பெண்கள் குறித்து ஆண்சமுதாயம் கட்டியெழுப்பி உள்ள கருத்துகளை மாற்றி, பெண்மைப் பண்புகள் குறித்த போலியான கட்டுப்பாடுகளை உடைத்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளது பெண்மொழி. பெண்ணியம் பெண்மொழியைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளதை இவ்வியல் விளக்குகின்றது,

'பெண் கவிஞர்களுள் பெண்ணிய நோக்குநிலை வேறுபாடு' என்ற நான்காவது இயல் பெண் கவிஞர்களுக்குள் ஏற்பட்டுள்ள கருத்து மாறுபாடுகள் குறித்து விளக்குகின்றது. சமுதாயம் தொடர்ந்து ஏராளமான சிந்தனையாளர்களைக் கண்டுவந்துள்ளது. அவர்களின் பங்களிப்பின் மூலமாகவே மாற்றமும் வளர்ச்சியும் கொண்டுள்ளது. ஆனால்

சிந்தனையாளர்களின் சிந்தனைகள் ஒரே மாதிரியானதாக இருக்கவில்லை. மாறுபட்ட சிந்தனைகளே புதிய புதிய கண்டுபிடிப்புகளை வழங்க முடியும். மாறுபட்ட சிந்தனைகள் தவறானதோ பொய்யானதோ இல்லை. அவை மாறுபட்ட கோணத்தில் உயர்வானதாகவும் இருக்கும் என்பதை உலகம் கண்டுவந்துள்ளது.

சமுதாயத்தில், மாறுபட்ட சிந்தனைகளின் மூலம் பல்வேறு துறைகளிலும் பல உட்பிரிவுகள் வளர்ச்சிபெற்றுள்ளன. அதுபோல் பெண் கவிஞர்களுள் மாறுபட்ட சிந்தனை கொண்டவர்கள் உள்ளனர். இவர்களின் கருத்துகள் சமுதாயம் சார்ந்த கருத்துகளாகவே உள்ளன. கவிஞர்களின் மாறுபட்டசிந்தனைக்கு அவர்களின் வாழ்க்கை நிலையும் பொருளாதார நிலையும் காரணமாக அமைந்துள்ளன. இதனால் பெண் கவிஞர்களின் மாறுபட்ட சிந்தனைகளுக்குப் பொருளாதாரமும் வாழ்விடச் சூழலும் காரணமாக அமைந்துள்ளன என்பதை விளக்குகின்றது.

'சமூகவியல் நோக்கில் பெண்கவிஞர்களின் பங்கு' என்னும் ஐந்தாவது இயல் பெண்படைப்பாளர்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய பங்களிப்பை எடுத்துரைக்கின்றது. படைப்பாளர்கள் சமுதாயம் சார்ந்தவர்களாகவே இருக்க முடியும் சமுதாயத்தின் நிறைகளையும், குறைகளையும் எடுத்துக் கூறி அவற்றை மாற்றி அமைப்பதில் இலக்கியங்கள் தொடர்ந்து பெரும்பணி செய்து வருகின்றன. சங்க காலம் முதல், பெண் படைப்பாளர்கள் அரசையும் அதிகாரத்தையும் நல்வழிப்படுத்தி வந்துள்ளார்கள். மக்களை நல்வழிப்படுத்துவதிலும் அறக்கோட்பாடுகளைப் பாதுகாப்பதிலும் படைப்புகளின் மூலம் சமுதாயப் பணி செய்து வந்துள்ளனர்.

சமுதாய மாற்றம் குறித்து பெண்படைப்பாளர்கள் மேற்கொண்ட பணிகளும் பண்பாட்டு மதிப்பீடு தொடர்பான கருத்துகளும் அவற்றை மாற்றியமைத்த பெண்படைப்பாளர்களின ஆற்றலும் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

ஆய்வு முடிவுரையில் மேற்கூறிய இயல்களில் கண்டறியப்பட்ட கருத்துகளின் வழி கிடைத்த ஆய்வு முடிவுகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை துணைநூற்பட்டியல் என்னும் தலைப்பின் கீழ் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.